**தேர்தல் காலத்தில் நம்முடைய திருஅவை எந்தவொரு அரசியல் கட்சியையோ அல்லது வேட்பாளரையோ ஆதரிக்காது அனுமதிக்காது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.**




*Published by:*
Peninsular Malaysia
Pastoral Team

*Edited by:*
**Fr Eugene**
*Director API*

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 32/2023


அடுத்த இரண்டு வாரங்களுக்கு மலேசியாவின் 6 மாநிலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தலை முன்னிட்டு அதற்குரிய நடவடிக்கைகளைப் பார்போம். தேர்தலில் வாக்களிக்கும் நாள் சனிக்கிழமை - ஆகஸ்ட் 12, 2023.

இந்த இரண்டு வாரங்களும் மலேசிய குடிமக்களாகவும், திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கும் நாம் நம் சாட்சிய மிக்க வாழ்க்கையால், இறைவாக்கினர்களாக இருப்பதற்கு ஒரு முக்கியமான நேரம். (தீமமேமா 2, 1986 இன் இறுதி அறிக்கை) இறைவாக்கினர்கள் தங்களின் தலைவராக இறைவன் தந்த பணியை நிறைவேற்றுகிறார்கள். “நான் உங்களுக்குக் கடவுளாய் இருப்பேன், நீங்கள் எனக்கு மக்களாய் இருப்பீர்கள்” (எரேமியா 7:23) என்று கூறும் இறைவனே நமக்கு அந்தப் பணியைத் தந்துள்ளார்.

இந்தப் பொறுப்பை, நாம் நமக்காகவும் நம் நாட்டின் நலனுக்காகவும் நிறைவேற்றுகிறோம்.

1 **முழந்தாட்படியிட்டு ஆரம்பிப்போம்.** - தேர்தல் பரப்புரை செய்யும் அனைத்துக் கட்சிகளிலும் நேர்மை, ஒருமைப்பாடு, நீதி, பொறுப்புணர்வு, வெளிப்படைத்தன்மை, தூய்மை மற்றும் அமைதி ஆகியவை வெளிப்பட இறைவேண்டல் செய்வோம். நம்முடைய அதிச க்களிலும், பங்கு பணிக்குழு ஒன்றுகூடல் மற்றும் அன்றாட திருப்பலிகள், ஞாயிறு திருப்பலிகள், திருமணி ஆராதனையில் ஆண்டவரை சந்தித்தல் போன்ற சமயங்களில் இதற்காக மன்றாடுவோம். தூய ஆவியானவரின் கொடைகளான, ஞானம், புரிந்துணர்வு மற்றும் சரியான வழிநடத்துதலுக்காக மன்றாடுவோம்., நம் நாட்டுக்காக அன்னையின் பரிந்துரையை வேண்டி, அனுதினமும் செபமாலை செபிப்போம். இந்தக் கருத்துக்காக, உண்ணாநோன்பு இருந்து மன்றாடுவோம்.

2 **நம்முடைய பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டின் மூலம்:** நமது அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களாக, வாக்குச் சாவடிகளில் பணிசெய்யும் முகவர்களாக நம்முடைய பங்களிப்பைத் தரலாம். உங்களுடைய பங்களிப்பாக, தன்னார்வத்தோடுப் பணி செய்பவர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்கலாம். சமூக ஊடகங்களில் பல்வேறு கட்சிகளின் உரைகளைக் கேளுங்கள். உங்கள் கருத்துகளையும் எழுதுங்கள். எது நல்லவை என்று உறுதிப்படுத்துங்கள். தவறாகப் பேசுபவர்களைக் கண்டியுங்கள். ஆனால் எப்போதும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடந்துகொள்ளுங்கள். நண்பர்களோடு சென்று உடல் அளவில் உதவி செய்யுங்கள். வேட்பாளர்களை சந்திக்க, ஊக்கப்படுத்த (சரியான வழிகளில்) நம் பங்குகளை ஊக்கப்படுத்துங்கள். வேட்பாளர்களை ஒன்றாகவோ அல்லது வெவ்வெறு சமயங்களிலோ அழைத்து அவர்களின் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள செய்யுங்கள். இதனால் ஒரு கட்சியை மட்டுமே ஆதரிப்பதாக குற்றம் சாட்டப்படுவதை தவிர்க்கலாம். நம்முடைய பகுதியில் இருக்கும் வேட்ப்பாளரை அறிந்துகொண்டு அவரை மதிப்பிடுங்கள். கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெற்று வாழும் ஒரு அருள்பணியாளராக, இறைவாக்கினராக, அரசராக சாட்சிய வாழ்வு வாழுங்கள். இதைப் பற்றி நம்முடைய அதிச, பங்கு மற்றும் புலனக்குழுவில் கலந்துரையாடுங்கள்.

நம்முடைய திருஅவை தன்னுடைய மகள்களையும், மகன்களையும் இதுபோன்ற நாட்களில் நாட்டின் தேவையில் ஈடுபட ஊக்குவிக்கிறது. அந்த நேரம் இதுதான். **தேர்தல் காலத்தில் நம்முடைய திருஅவை எந்தவொரு அர ியல் கட்சியையோ அல்லது வேட்பாளரையோ ஆதரிக்காது, அனுமதிக்காது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.**


5 & 6 ஆகஸ்ட் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH


ஆண்டின் பொதுக்காலம் 18 ஞாயிறு
**ஆண்டவரின் தோற்றமாற்றம் விழா**

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
**புதுப்பித்தலை நோக்கிப் பயணித்தல்**

மாதாந்திர நிகழ்வு:
**அஜிர்னமெந்தோ (மறுமலர்ச்ி 1976)**

1976 ஆம் ஆண்டு தீபகற்ப மலேசிய திருஅவையின் அனைத்து ஆயர்கள், அருள்பணியாளர்களும் அஜிர்னமெந்தோ(மறுமலர்ச்சி) புதுப்பித்தல் என்னும் புதிய பயணத்திற்காக ஒருமாதம் இதில் கலந்து கொண்டனர். அனைத்து பங்குகளும் அருள்பணியாளர்கள் இல்லாத மாதமாக, ஞாயிறு வழிபாடு மற்றும் இதர முக்கிய தேவைகளைப் பொதுநிலையினரே திருஅவையில் வழிநடத்தினார்கள். இந்த புதுப்பித்தல் நிகழ்வு தீபகற்ப மலேசியாவில் மேய்ப்புப்பணி அக்கறைக் கொண்ட முக்கியத் தேவைகளை வெளிப்படுத்தியது. அன்றிலிருந்து, தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி மாநாடுகளின் மூலம் ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கு மேய்ப்புப்பணி திட்டங்களின் வழியாக வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த அனுபவத்தின் பலனாக, திரித்துவத்தில் ஒற்றுமையில் நம்முடைய அடையாளத்தைக் காண்பஹ்டு. அதிச க்களைக் கட்டியெழுப்புவது மற்றும் கலாச்சாரம், சமயங்கள் மற்றும் ஏழைகளோடு உரையாடுவதும் ஆகும்.

